[1980 ஜூலை 8]

தனுஷ்கோடிக்கு சாலைகள் அமைத்து, அந்த இடத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒப்பந்தம் போடப்பட்டு, கட்டப்படவேண்டிய பாலமே மூன்றில் ஒரு பங்கு வேலையோடு நிறுத்தப்பட்டுள்ளது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 54-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருவார்.

உ. தகவல் கோரல்.

(அ) கேரள நதிநீர் பங்கீடு.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மேற்குப் பக்கமாக போகின்ற நதிகளின் நீரை தமிழகத்திற்குக் கொடுப் பதைப் பற்றி நேற்று கேரளாவில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினசரி ஏதாவது பேசு கிறீர்கள். நிகழ்ச்சி நிரலில் உள்ள பிரச்சினையை முடித்து விட்டு, அடுத்த பிரச்சினைக்கு வரலாம்.

பேரவை விதி 54-இன் கீழ் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கள் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம், கே. எம். தங்கமணி, இ. முத்துராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். திரு. மு. அம்பிகாபதி.

(ஆ) பேரவையில் ஒலிபெருக்கி வசதி.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னால் என்னுடைய முதல் வேண்டுகோளாக உங்களிடம் கொண்டு